C.C.NO.141/2022 Page No.
DATE:23.05.2025.
P.W.3 SUMANGALI W/O.PARI

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

ஏற்கனவ பிரச்சனை சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. ரூ.2000 ஜிபே செலுத்தியதற்கான ரசீது பேலிசாரிடம் கொடுக்கவில்லை. பணம் செலுத்தியதற்கான ஆவணம் எதுவும் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் என் கணவருக்கு தான் தெரியும். சண்டை எதுவும் நடக்கவில்லைஎன்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரை மருத்துவமனைக்கு அழைத்த நபரின் பெயர் சீனு ஆவார். என் கணவரின் மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றது யார் என்றால் என் மாமனார் ஆவார். அன்று இரவு காவலர் பணியில் இருந்தார். சம்பவத்தின்போது இருட்டாக இருந்ததால் உடன் இருந்தவர்கள் யார் என்று என்னால் அடையாளம் காட்டமுடியாது. குடியிருக்கும் பகுதிக்குள் எத்தனை தெருவிளக்குகள் உள்ளது தோராயமாக 4-5 இருக்கும். எந்தளந்த நபர் குறிப்பிட்டு என் கணவரை அடித்தாரக்ள என்றால் துரைசாமி என்பவர் கல்லால் என் கணவரின் இடதுபக்க நெற்றியில் அடித்தார். நான் குழந்தை வைத்திருந்ததால் என்னால் தடுக்க முடியவில்லை. நான் குழந்தை வைத்திருந்த விவரத்தை போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன். வீடியோ ஆதாரம் கொடுத்தேனா என்றால் வீடியோ எடுக்கவில்லை. முயற்சி செய்தேன். நான் வீடியோ எடுத்தேன் என்றும் அதில் உள்ள விவரங்கள் எனக்கு பாதகமாக இருப்பதால் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் என் கணவர் நான்கு சக்கர வாகனத்தில் வேகமாக இயக்கியதால் யாரோ ஒரு நபர் அவரை அடித்து விட்டார்கள் என்றால் சரியல்ல. நானும் என் கணவரும் ஒன்றாக தான் இருந்தோம். என் கணவரும் என் மாமனாரும் சொல்லி கொடுத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அடுக்கம்பாறை மருத்துவமனையில் கொடுத்த சான்றிதழகளை நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை. நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 23.05.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

ஓம்/- திலிப்பாபு,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்பாடி.